# ஷோபா எமரால்ட் சென்னையில் நுழைகிறது

சென்னை, ஜூன் 3-ஷோபா டெவலப்பர்ஸ் லிமிடெட் தனது ஆடம்பர குடியிருப்பு திட்டமான 'ஷோபா எமரால்ட்' என்ற ஆடம்பர குடியிருப்பு திட்டம் தென்னிந்தியாவின் மான்செஸ்டர்என அழைக்கப்படும் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான கோயம்புத்தூரில் நிறைவடைந்ததாக அறிவித்தது. இத்திட்டம் கடந்த 2008ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கப்பட்டது. இது தமிழ்நாட்டில் ஷோபா டெவலப்பர்ஸ் வெற்றிகரமாக கட்டி முடித்துள்ள முதலாவது திட்டமாகும்.

இது குறித்து கருத்து தெரிவித்த ஷோபா டெவலப்பர்ஸ் லிமிடெட்டின் தமிழ்நாட்டிற்கான பிராந்திய இயக்குநர் டி.பி.சஞ்சய் சாரதி கூறுகையில், கோயம்புத்தூர் நகரத்திற்காக திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு ஆடம்பர குடியிருப்பு திட்டங்களில் ஷோபா எமரால்ட் முதலாவதாகும். ஷோபா விரைவில் சென்னை சந்தையிலும் நுழைவதுடன், சென்னை மற்றும் கோயம்புத்தூரில் இந்த நிதியாண்டில் பல்வேறு மதிப்புமிக்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்றார்.